நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
எழிலகம் இணைவகம்,
சேப்பாக்கம்,சென்னை–600 005.

**ந.க.எண். 34283/2008/ப்பி4. நாள்:- 10.07.2008.**

சுற்றறிக்கை

பொருள்:- குத்தகை– நகராட்சிக்கு சொந்தமான நிலம் / காலி இடங்களை அரசின் அனுமதி பெறாமல் தனியாருக்கு நீண்ட கால குத்தகைக்குவிடுவது குறித்து அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

நகராட்சி மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் / காலி இடங்களை அரசின் அனுமதி பெறாமல் தனியாருக்கு நீண்ட கால குத்தகைக்கு விடப்பட்டுள்ள விபரம் இவ்வியக்கத்தின் கவனத்துக்கு கொண்டவரப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள இடங்கள் எதிர்கால தேவைக்கு பயன்படும் என்ற நோக்கத்தில் அவைகளை அரசின் அனுமதி பெறாமல் விற்பனை செய்தல் அல்லது குத்தகைக்கு விடக்கூடாது.

இருப்பினும் திட்ட செயலாக்கத்திற்கு காலி இடங்களை நீண்டகால குத்தகைக்குவிட உத்தேசிக்கப்படுமானால் முதலில் நகர்மன்றத்தின் அனுமதி பெற வேண்டும். பின்னர் அரசின் அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.

நகராட்சியின் காலி இடங்களை அரசின் அனுமதி பெறாமல் தனியாருக்கு நீண்டகால குத்தகைக்கு விடப்பட்டிருந்தால் அதுபோன்ற இனங்களை கண்டறிந்து அரசின் பின்னேற்பு பெற உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து மண்டல இயக்குநர்களையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஏற்பளிப்பு அனுப்ப வேண்டும்.

ஒம்/– நிரஞ்சன் மார்டி,
**நகராட்சி நிர்வாக ஆணையர்.**

பெறுநர்
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
அனைத்து நகராட்சி ஆணையர்கள்/ செயல் அலவலர்கள் [இ மெயில் மூலமாக]
நகல்– WEB section.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/
கண்காணிப்பாளர்.
16.7.08
16/7/08